பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்பி

மலர்: 15] சென்னை: மார்கழி 27 (11—1—68) வியாழன் ★ வெளியூர்: மார்கழி 28 (12—1—68) வெள்ளி [இதழ்: 175

ஆக்கிரமிப்புக் கொடி அல்ல—பண்பாட்டின் கொடி!

" தமிழர்கள் ஜாவா, சுமாத்ரா, போர்னியோ, மலேசியா—இப்படிப் பல நாடுகளுக்குச் சென்றனர்!

" அவர்கள் தாங்கிச்சென்ற கொடி ஆக்கிரமிப்பின் கொடியல்ல — அது, கலையின் பண்பாட்டின் கொடி!"

—அறிஞர் அண்ணா

தயங்காதே—மயங்காதே தமிழா!

தாய்மொழி பற்றைக் காட்டி விட்டனர் தமிழ் மக்கள்!

முதலமைச்சர் அண்ணா பெருமிதம்!

பூம்புகாரில் விழா நிறைவுச் சொற்பொழிவின் துவக்கத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டதாவது:—

'உள்ளமெல்லாம் தமிழ் நிறைந்திருக்கும் வேளை—ஊனும் உயிரும் தமிழோடு கலந்திருக்கும் வேளை—எதைப் பற்றிப் பேசினாலும் தமிழைப் பற்றியே பேசிடும் வேளை — எதையும் தமிழோடு ஒப்பிட்டுப் பார்க்கும் வேளை—இந்த வேளையில் நான் ஆற்றும் பேருரை, பேருக்குத்தான் உரையாக அமையுமே யல்லாது பேருரையாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை.

பூம்புகாரில் 10 நாட்களாக நாம் கண்ட காட்சி — கேட்ட கருத்துக்கள் — உள்ளத்தில் பொங்கிய எழுச்சியைப் பார்த்த நாம், நாளைய தினம் இதே உற்சாகத்தோடும் உள்ள எழுச்சியோடும் இங்கு காணப் போகிறோமா என்றால், காணமுடியாது!

'ஏதாவது ஒரு முறையில் இந்த மாநாடு தொடர்ந்து நடக்காதா —பத்து நாள் நிலவிய தமிழ் நாதம் நிரந்தர நாதமாக இருக்காதா — இந்த மாநாடுபோல் எல்லா ஊர்களிலும் மாநாடு நடத்தக்கூடாதா—தமிழ் மக்கள் ஒவ்வொருவருடைய எண்ணத்திலும் தமிழ் எழுச்சி எழச் செய்யக் கூடாதா—என்று அனைவரும் நினைக்கத்தகும் அளவில் பூம்புகார் மாநாடு அமைந்தது!

'பூம்புகார் மாநாடு இவ்விதம் அமையும் — இவ்வளவு ஏற்றமுடன் அமையும்' என்று நாங்கள் துவக்கத்தில் நினைக்கவில்லை!

'மொழிக்காக ஒரு மாநாடு கூட்ட முடியும் — அதற்கு இலட்சக் கணக்கில் மக்கள் வருவார்கள் —மணிக்கணக்காக—நாள் கணக்காக உட்கார்ந்திருப்பார்கள்' என்று நாங்கள் அவ்வளவு அதிகமாக எதிர்பார்க்கவில்லை! ஆனால், தமிழ் மொழிப் பற்று எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை மக்கள் காட்டிவிட்டார்கள்!

மக்களின் இந்த ஆர்வத்தைக் கண்ட வெளிநாட்டார், தத்தமது நாட்டிற்குச் சென்று கூறப் போகிறார்கள்!

"எந்தத் தமிழைப்பற்றி ஆராயத் தமிழகம் சென்றோமோ அந்தத் தமிழகத்திலுள்ள மக்கள், எங்களுக்கு முன்பே நெடுங் காலந் தொட்டு ஆராய்ந்து — அந்த ஆராய்ச்சியால் அகமகிழ்ந்து— அந்தத் தமிழ் மொழியை ஆவியிலும் மேலாக நேசிக்கிறார்கள்; தங்களுக்கு இன்பமளிக்கும் எல்லாச் சாதனங்களிலும் உயர்ந்ததாக நினைக்கிறார்கள்; தமிழ் மொழியின் மாண்பை எண்ணி எண்ணி மகிழ்கிறார்கள்; அந்தத் தமிழுக்கு எந்தப் பக்கமிருந்து—எவரிடமிருந்து எந்த வகையான ஊறு வந்தாலும், 'ஊறு வரும்' என்று ஐயப்பட்டா

(4-ம் பக்கம் பார்க்க)

வேலை இருக்கிறது நிரம்ப—விழா மயக்கத்திலிருந்து தெளிவீர்!

'அந்த நாள் உணர்ச்சியையும் எழுச்சியையும் நாம் மீண்டும் பெறவேண்டும்'—பூம்புகார் மாநாட்டில் அண்ணா—விழா நிறைவுச் சொற்பொழிவு

" தமிழர்கள் தங்களை உணரத் தொடங்கிவிட்டார்கள்! தமிழனின் பண்பு, யாருக்கும் தாழ்ந்தவனாக இருப்பதல்ல! யாரையும் தாழ்த்துவதும் அல்ல!

' தமிழகம் உலகின் ஒரு பகுதியாக இருக்கலாம்; ஆனால், அது யாருடைய வேட்டைக் காடாகவும் இருந்திட ஒரு நாளும் ஒருப்படமாட்டோம்!

என்று அறிஞர் அண்ணா அவர்கள், உலகத் தமிழ் மாநாட்டில் விழா நிறைவுச் சொற்பொழிவாற்றுகையில் குறிப்பிட்டார்கள்; தொடர்ந்து அவர், தயங்காமல் மயங்காமல் தமிழர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து விளக்குகையில் தெரிவித்ததாவது:—

" நமக்கிருக்கும் தயக்கத்தைப் போக்கும் மாநாடுதான் இந்தப் பூம்புகார் மாநாடு! 'தயங்காதே தமிழா' என்று அடிப்படைப் பாடத்தைத் தருகிற மாநாடு இது! அந்தப் பாடத்தோடு, 'மயங்காதே தமிழா' என்ற பாடத்தையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

" மயக்கம் ஏனென்றால், 10 நாட்களாக நாம் தமிழின் பெருமை கேட்டு அந்த மயக்கத்திலே இருக்கிறோம்; ஆனால் இந்த மயக்கம் கெடுதல் செய்யாத மயக்கம்; தமிழன் ஒருவன்தான் இவ்விதம் கெடுதல் தராத மயக்கத்தை — மொழி தரும் இன்பத்தைப் பெற்றவன்; அந்த மயக்கத்திலிருந்தும் நாம் விடுபட்டாக வேண்டும்; ஏனெனில், வேலை இருக்கிறது நிரம்ப — வேலை இருக்கிறது ஒவ்வொருவருக்கும் — வேலை இருக்கிறது ஒவ்வொரு நாளும்!

" காடு திருத்திட வேண்டும்; வளம் பெருக்கிட வேண்டும்; வேலையற்றோருக்கு ஒரு வேலை தந்து அவர்களை செய தொழில் நேர்த்தி கொண்டவர்களாக மாற்றிட வேண்டும; நிலத்தைத் தோண்டிக் கனிப் பொருட்களை எடுத்திட வேண்டும்; சாதாரணப் பொருட்களை மட்டுமல்ல—வரலாற்றுப் பொருட்களையும் தோண்டி எடுக்க வேண்டும்!

" தூர்ந்துபோன துறைமுகத்தைச் சீர்திருத்தி — அவற்றிலிருந்து தமிழ் நாவாய்களை — கப்பல்களைச் செலுத்தியவாறு தமிழகத்து மாலுமிகள் தமிழ்க் கவிதைகளை இசைத்துககொண்டு செல்லவேண்டும்!

" முன்பிருந்த மன்னர்கள், அலைகடலை வென்றார்கள்; நமது வணிகர்கள் நாவாய்களில் ஏறிக்கொண்டு மோரீஸ் தீவுக்கும், பிஜித் தீவிற்கும், மடகாஸ்கருக்கும் சென்று தமிழ் மணம் பரப்பினர்" என்று இப்போது ஆராய்ச்சியாளர்கள் அறிவித்திருக்கிறார்கள்; ஆனால், இந்தச் செய்தியை நமது பழம் பெரும் கதைகள் வெகு நாட்களுககுமுன்பே கூறியிருக்கின்றன.

" தரணி மெச்ச வாழ்ந்தோம் ஒரு நாள்! 'தரணியிலிருந்து யார் என்ன கொடுப்பார்கள்' என்று ஏங்குகிறோம் இன்று!

" ஞாயிறாகத் திகழ்ந்தோம் அன்று! இருட் குகையில் சிக்கித் தவிக்கிறோம் இன்று! அதற்காக, 'அந்த ஞாயிறு மறைந்து விட்டது' என்று பொருள் அல்ல; 'நமது கண்கள் பழுதாகி விட்டது' என்றுகூடக் கூறமாட்டேன்; கொஞ்சம் மங்கலாகி விட்டது; மங்கலான கண்களைக் கொஞ்சம் துடைத்து விட்டுக்கொண்டு பார்த்தால் ஞாயிறு தெரியும்!

" நாமும் ஏறிட்டுப் பார்த்து நெஞ்சு நிமிர்த்தி, 'ஞாயிறு போற்றுதும் — ஞாயிறு போற்றுதும்' என்று இளங்கோவடிகள்போல் பாடலாம்!

" 'தமிழகம் இன்று, தனது இயல்பான மாண்புகளை மறந்து துயில் கொள்கிறது' என்று கூறமாட்டேன்; 'மயங்கிக் கிடக்கிறது' என்று கூறமாட்டேன்; 'தயக்கம் இருக்கிறது' என்றுதான் கூறுவேன்! 'நம்மால் முடியுமா' என்ற தயக்கம் நமக்கு இருக்கிறது; சேரன் வடநாட்டின்மீது படையெடுத்துச் சென்றபோது, 'நம்மால் முடியுமா' என்று அவன் தயங்கவில்லை!

" சோழன் நாவாய்களைச் செலுத்தி அலைகடலுக்கு அப்பாலுள்ள நாடுகளை வென்றபோது, 'நம்மால் முடியுமா' என்று அவன் தயங்கவில்லை!

" காட்டுப்புறத்தில் தினை பொறுக்கச் சென்ற கிராமத்துத் தமிழ்ச் சீமாட்டி ஒருத்திமீது புலி பாய்ந்து வந்தபோது, 'நம்மால் முடியுமா' என்று அவள் நினைக்கவில்லை; கையில் கிடைத்த முறத்தால் அடித்து விரட்டினாள்; 'காட்டுக்கு அரசன் ஆயிற்றே நாம்; இவள் வீட்டுக்கு அரசிதானே; வேல் எடுக்காமல்—வாளை எடுக்காமல்—குப்பை அள்ளும் முறத்தால் தாக்க வருகிறாளே; இது தமிழ்நாடு அல்லவா—இது தமிழச்சியின் ஆற்றல் திறம் அல்லவா' என்று எண்ணி அந்தப் புலி, வெட்கத்தால் ஓடியிருக்கும் என்றே கருதுகிறேன்.

" அன்று தமிழ்ப் பெண்கள் புலியை முறத்தால் அடித்துத் துரத்தினார்; இன்றும் தமிழ்ப் பெண்கள், நமது பகையை முறத்தால் அடித்து விரட்டத் தயார்; எனினும், அந்த முறம் கிடைத்தால், 'அதை எங்கு விலைக்கு விற்றுக் காசாக்கலாம்' எனக் கருதுகிற பகைதான் நமது பகை!

" வானத்தில் பறக்கும் புள்ளினம் வேறு பக்கம் பறந்துகொண்டிருப்பினும், இனிய கானத்தில் ஈர்க்கப்பட்டு, கப்பல் இருக்கும் திசை நோக்கி வரும்! கப்பல்மீது புள்ளினம் சிறகடித்துப் பறப்பது, கப்பலுக்கு வானக்குடை விரித்ததுபோல் அக்காட்சி அமையவேண்டும்! தமிழரின் இசையை அந்தப் புள்ளினம் கேட்டு அவை பாட—புள்ளினத்தின் பாட்டை இவர்கள் பாட வேண்டும்!

" 'பறவைகளாகிய எங்களுக்குத் தூய உள்ளம்; ஆகவே, நாங்களும் தமிழினம்தான்: உயர உயரப் போகிறோம்; இதுதான் தமிழன் மாண்பு; ஆகவே நாங்களும் தமிழினம்' என்று கூறிட வேண்டும்—அந்தப் பறவைகள்;

" இந்த நாளை எண்ணித்தான் பார்க்கிறோம்; 'எண்ணியது நடக்கும்—நாம் திண்ணியராகப் பெற்றால்' என்று வள்ளுவர் கூறுகிறார்! உலகத்தில் நாம் எண்ணியது நடக்கும்—நாம் திண்ணியராகப்பெற்றால்!

" 'தயங்காதே தமிழா—மயங்காதே தமிழா' என்ற பாடங்களோடு, 'தமிழர் திண்ணியராகவும் வேண்டும்; அவ்விதம் திண்ணியரானால் உலகில் அவர் எடுக்கின்ற காரியங்கள் அனைத்தும் முடியும்' என்ற நம்பிக்கையை—நாதம் நிறைந்த பாடத்தைப் பெற்றால், நம்மை உலகிற்கு யார் எனறு அறிவிக்கும் நாளும் வரும்!

" அந்த உறுதியைப் பெறப் பழம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தின் தலைவி கண்ணகியைப் பார்த்தால் தெரியும்; நீதி கேட்டு—கண்ணீர் உகுத்தவாறு—கையில் காற்சிலம்போடு அரசவை சென்று—வாயிலோனை அழைத்து, 'அறிவு அறை போகிய அரசனே' என நெடுஞ்செழியப் பாண்டியனையே அறைகூவி அழைத்தாள்—உள்ள உறுதி இருந்த காரணத்தால்!

"இத்தனைக்கும் அவள், கணவனை இழந்த காரிகைதான்; 'கணவன் இறந்தான்' என்றதும் அழுது புலம்பாமல்—'இன்னும் சிறிதுகாலம் பிழைத்திருக்கலாம்; மறுவாழ்வு வாழலாம்' என்று நினையாமல்—நீதிக்குப் போராடிய சோழ வளநாட்டின் பத்தினித் தெய்வம் அல்லவா கண்ணகி?

" கணவனை இழந்தபோதும், 'அவன் பெயருக்கு மட்டும் மாசு சூழ்ந்திடவிடமாட்டேன்' என வஞ்சினம் பூண்டு அரசவை சென்று, 'அறிவு அறை போகிய மன்னா' என்று முரசறைந்தாளே—அந்தத் தமிழினத்தின் பத்தினித் தெய்வம் தரும் வீர உணர்ச்சி நாம் பெறாத காரணம் என்ன?—இதைத்தான், கடற்கரையில் கண்ணகியின் சிலை திறந்த காட்சியும் மாட்சியும் நமக்குப் போதிக்கிறது!

" கணவனை இழந்த ஒரு பெண்—அறிவைத் தவிர வேறொன்றும் துணை இல்லாதவள்—மன்னனையே பார்த்து, 'அறிவு அறை போகிய மன்னா?' என அழைக்கும் அந்நாள் உணர்ச்சியை— எழுச்சியை நாம் மீண்டும் பெறவேண்டும்.

" நாம் உலகிற்குத் தரமுடிந்தது இந்த அறிவுச் செல்வத்தைத் தான்! அதுதான் கொடுக்கக் குறையாத செல்வம்!

" இந்தப் பத்து நாட்களாகக் கண்ட எழில்மிகு காட்சிகளையும், உலாவையும், விழாவையும், அவற்றால் ஏற்பட்ட அகப்பொலிவையும் முகப்பொலிவையும் ஊரெல்லாம்—நல்லோர்க்கெல்லாம் எடுத்துச் சொல்லுங்கள்!

" இத்தகைய நற்செய்தியை எடுத்துச் செல்லும் திருத் தூதர்களாய் நீங்கள் சென்று வாருங்கள்—வென்று வாருங்கள்! தமிழகத்திற்கு வளம் சேர்த்துத் தாருங்கள்!"

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1998 மார்கழி 27 (11—1—68) வியாழன்

கருத்திருமன் அரசியல் 'கருத்துரை'!

அனைத்திந்தியக் காங்கிரசுக் கட்சியின் 71-வது மாநாடு, ஆந்திர மாநிலத்தின் தலைநகரான ஐதாராபாத் நகரில் நடைபெறுகிறது. அம்மாநாட்டின் பொருளாய்வுக் குழுவில் தமிழகச் சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவரான கருத்திருமன் அவர்களும் கலந்துகொண்டிருக்கின்றார்; அக்குழுவில் அவர், சனநாயக உணர்வுக்கு உலை வைத்துவிடக்கூடிய பயங்கரமான கருத்து ஒன்றை வெளியிட்டிருக்கின்றார்; அவருடைய அக்கருத்தை, மற்றொரு காங்கிரசுத் தலைவரான எஸ்.கே. பாட்டிலும் ஓரளவுக்கு ஆதரித்துள்ளார்.

கருத்திருமன் அவர்களால் வெளியிடப்பட்டு பாட்டில் அவர்களால் ஆதரிக்கப்பட்ட அக்கருத்து, ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கின்ற கட்சி அல்லது கட்சிகளிடம் காங்கிரசுக் கட்சியினர் எந்த அளவுக்கு அழுக்காறும், பகையுணர்ச்சியும் கொண்டிருக்கின்றனர் என்ற உண்மையை உணர்த்துவதாக அமைந்திருக்கிறது. இதுவுமன்றி, அதிகாரத்தை இழந்துவிட்டிருப்பதால், காங்கிரசுக் கட்சியினர் அடைந்திருக்கக்கூடிய வேதனை எத்தகையது என்ற உண்மையையும் அது எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது.

கருத்திருமன் அவர்கள் தமிழகத்தைச் சேர்ந்தவர்; தமிழகச் சட்டப் பேரவையின் எதிர்க் கட்சித் தலைவராக இருந்துவருபவர்; எனவே அவர், தமிழக ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற கழகத்தை மத்திய அமைச்சர்கள் வெளிப்படையாகப் பாராட்டுவதால், தமிழகக் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்படக்கூடிய நெருக்கடியைப் பற்றி மட்டுமே குறிப்பிட்டிருக்கின்றார்.

கழகம் ஏற்றிருக்கின்ற -- தமிழக அரசு செய்துவரக்கூடிய நற்பணிகளை, அவற்றின் நல்விளைவுகளைக்கொண்டு மத்திய அமைச்சர்கள் வெளிப்படையாகப் பாராட்டியுள்ளனராம்; அப்படிக் கழக ஆட்சியை வெளிப்படையாகப் பாராட்டுவதானது, எதிர்க் கட்சித் தலைவரான தம்மையும், தாம் சார்ந்திருக்கின்ற தமிழகக் காங்கிரசுக் கட்சியையும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவிடுகிறதாம்; இதைத்தான் கருத்திருமன், தழதழத்த குரலில் காங்கிரசு மாநாட்டின் பொருளாய்வுக் குழுக் கூட்டத்தில் கூறி ஓலமிட்டிருக்கின்றார்.

கழக ஆட்சிக்குப் பாராட்டுத் தெரிவிக்கின்ற மத்திய அமைச்சர்கள்மீது பாய்ந்துள்ள அதே நேரத்தில், கழக ஆட்சியை வெளிப்படையாகப் பாராட்டியுள்ள மதத்திய அமைச்சர்கள்மீது அறியாமைக் குற்றத்தையும் கருத்திருமன் சுமத்தியுள்ளார்; அதாவது, ஏற்கனவே இருந்த காங்கிரசு ஆட்சி செம்மையாக நிர்வாகம் செய்துவந்ததாகவும், அந்த நிர்வாகத்துக்கு உரிமை கொண்டாடிக் கழக ஆட்சி தனக்குப் பெருமை தேடிக்கொள்ளுவதாகவும், இவ்வுண்மையை அறிந்துகொள்ளாமல் மத்திய அமைச்சர்கள் கழக ஆட்சியைப் பாராட்டியுள்ளதாகவும் நூதனமான அரசியல் வாதத்தைக் காட்டியுள்ளார்.

அரசு என்பது தொடர்ந்து இயங்கிவரக்கூடிய அமைப்பு என்பது இலக்கணம். அந்த அரசை இயக்கிவரக்கூடிய அரசியல் கட்சியை ஐந்தாண்டுக்கு ஒருமுறை மக்கள் மாற்றி அமைத்திடுவர். எனவே, குறிப்பிட்ட ஐந்தாண்டில், அரசை இயக்கிவரக்கூடிய பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற அரசியல் கட்சி அரைகுறையாகச் செயல்படுத்தாது விட்டுவிட்ட பணிகளைத் தொடர்ந்து செய்துமுடிக்க வேண்டிய பொறுப்பு அடுத்த ஐந்தாண்டில் அதை இயக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய கட்சியின் கட்டாயக் கடமையாகிறது. இந்த நிலையில், ஏற்கனவே அரசுப் பொறுப்பை ஏற்றிருந்த கட்சி செய்திருந்த பணிகளுக்கு—அப்பணிகளை முழு அளவில் முற்றுப்பெறச் செய்த அமைப்பு என்ற முறையில்—பின்னர் அதே ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள அரசியல் கட்சி, அதற்குரிய உரிமையைக் கோருவதிலும் அதற்குரிய பாராட்டுதலைத் தொடர்புடைய மத்திய அமைச்சர்களிடமிருந்து பெறுவதிலும் தவறு ஏது?

'நெல் விலையை மேலும் உயர்த்தித் தரவேண்டும்' என்று—அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவராக இரண்டு நாட்களுக்கு முன்புவரையில் இருந்துவந்த காமராசர்—கழக ஆட்சிமீது மக்களுக்கு அதிருப்தியை மூட்டும் நச்சு நினைப்பில்—முன்பொரு முறை கூறினர்; இக்கூற்றைக் கண்ட மத்திய உணவு அமைச்சர் செகசீவன்ராம், 'நெல்லுக்கு விலை எப்படி--யாரால் நிர்ணயிக்கப்படுகிறது என்ற உண்மையை உணர்ந்துகொள்ளாமல்—தமிழக அரசை மனதில் நினைத்துக்கொண்டு—காமராசர், விலையை மேலும் உயர்த்த வேண்டும் எனக் கூறியுள்ளார்' என்ற விளக்கத்தைத் தந்திருந்தார்.

இவ்விளக்கம், கருத்திருமனுக்கு ஆத்திரத்தை மூட்டிவிட்டது; உணவு அமைச்சர் செகசீவன்ராம் அவர்களைக் கண்டித்ததுடன், 'அவரை அமைச்சர் பொறுப்பிலிருந்து விரட்டிவிட வேண்டும்' என்றும்கூட வெளிப்படையாக அறிவித்தார்.

செகசீவன் ராம்மீது கருத்திருமன் கடுங்கோபம் கொண்டிருப்பதற்கு மற்றொரு காரணமும் இருக்கிறது; 'நெல் விலையை உயர்த்தித் தரவேண்டும்' எனக் கருத்திருமன் கோரி வந்திருப்பதை மத்திய உணவு அமைச்சரிடம் எடுத்துக் கூறியபோது, அதற்கு மறுமொழியாக செகசீவன்ராம், 'கருத்திருமனுக்கு என்ன தெரியும்?' என அப்பொழுது கூறினர். இந்த நிகழ்ச்சியும், மத்திய உணவு அமைச்சர்மீது, கருத்திருமன் அவர்களைப் பகை பாராட்டிவர வைத்திருக்கிறது. இது, அவர்களுடைய உள்கட்சி விவகாரம்; இதுபற்றிய கவலை நமக்கில்லை.

ஆனால், கழகம் பொறுப்பேற்றிருக்கின்ற தமிழக அரசு செய்கின்ற நற்பணியை, காங்கிரசுக் கட்சி பொறுப்பேற்றிருக்கின்ற மத்திய அரசிலுள்ள அமைச்சர்கள் வெளிப்படையாகப் பாராட்டுவது, அரசியல் முறைகேடா? அப்படிப் பாராட்டுவது கூடாதா?

கழகம் பொறுப்பேற்றுள்ள தமிழக ஆட்சியை—அது செய்யக்கூடிய பணி சிறந்த ஒன்றாக இருந்தாலும்—'காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த மத்திய அமைச்சர்கள் பாராட்டக்கூடாது; அப்படிப் பாராட்டுவது, தமிழகக் காங்கிரசுக் கட்சிக்குச சங்கடமான நிலையை உருவாக்கிவிடுகிறது' என்பது, கருந்திருமன் அவர்களின் அரசியல் சித்தாந்தம்.

கழகம் பொறுப்பேற்றிருக்கக்கூடிய தமிழக அரசு செய்கின்ற பணி ஒவ்வொன்றையும்--அது, மக்களுக்கு நன்மை பயப்பதாக இருந்திட்டாலும்--பாராட்டினால், தமிழகக் காங்கிரசுக் கட்சிக்குச் சங்கடம் ஏற்பட்டுவிடுமே என்பதற்காக, மத்திய அமைச்சர்கள் அதைப் பாராட்டக்கூடாது—அதற்குப் பதிலாக இன்றையத் தமிழக அரசு செய்கின்ற ஒவ்வொரு நற்பணியையும் கண்ணை மூடிக்கொண்டு கண்டிக்கத் துணிய வேண்டும்—இப்படி மத்திய அமைச்சர்கள் கண்டித்தால்தான், தமிழகக் காங்கிரசுக் கட்சிக்குச் சங்கடம் ஏற்படாமல் இருக்கக்கூடும்—என்பது, கருத்திருமன் அவர்களின் அரிய அரசியல் கருத்து!

"கழகம் பொறுப்பேற்றுள்ள தமிழக ஆட்சியை மத்திய அமைச்சர்கள் பாராட்டுதல் கூடாது; பாராட்டுவதன் பலனாகத் தமிழகக் காங்கிரசுக் கட்சிக்கு அரசியல் துறையில் பெரும் சங்கடம் ஏற்படுகிறது; எனவே, எப்பொழுதும்--எதற்கெடுத்தாலும், இன்றையத் தமிழக ஆட்சியை—தகுந்த காரணம் இருந்தாலும் இல்லாமற்போனாலும்—மத்திய அமைச்சர்கள் வன்மையாகக் கண்டித்துக்கொண்டே இருத்தல் வேண்டும்" என நல்லுரை கூறுகிறார்—தமிழகச் சட்டப் பேரவை எதிர்க் கட்சித் தலைவராகப் பொறுப்பேற்றுள்ள கருத்திருமன் அவர்கள்!

கழக ஆட்சியைப் பாராட்டினார் என்ற ஒரே காரணத்துக்காக மத்திய உணவு அமைச்சரைச் சாடத் துணிந்திருக்கின்ற கருத்திருமன், கழக ஆட்சியைக் கண்டித்துக்கொண்டிருப்பதையே தமது அரசியல் பெரும் பணியாக ஆக்கிக்கொண்டில்லாமல் வேறு எப்படி இருந்திட முடியும்? தமது உள்ளத்தில் உறைந்திருக்கின்ற அரசியல் பகை காரணமாகத்தான், கழக ஆட்சியைக கருத்திருமன் கண்டித்துக்கொண்டிருக்கின்றார் என்ற உண்மையைத் தமிழக மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்; எனவே, கழக ஆட்சி பற்றிக் கருத்திருமன் கூறக்கூடிய இந்தக் குற்றச்சாட்டுக்களையும், கண்டனங்களையும், 'நியாயமற்றவை--வெறும் அரசியல் இலாபத்தைக் கருதி மட்டுமே பேசப்படுகின்ற வம்புப் பேச்சுக்கள்' என்பதை அறிந்து அவர் கூற்றை அலட்சியப்படுத்தி ஒதுக்கித் தள்ளிவிட வேண்டும் தமிழக மக்கள்!

—கா. க.

புதியதோர் உணர்வுடன் தாயகம் திரும்புகின்றனர்!

வளஞ்செறிந்த தமிழ் மரபின்மீது மேலை நாட்டு விற்பன்னர்கள் ஆர்வம்

'தங்கள் மொழியை மேம்படுத்தப் பாமர மக்கள் கிளர்ந்தெழுந்ததை நாங்கள் கண்டதே இல்லை' என்கின்றனர்!

'மொழி ஆர்வலர்கள் புத்துயிர் பெற்றுள்ளனர் --- பண்டைப் பண்பாட்டை ஆராய்வதன் மூலம் உலக அமைதியைக் காண இயலும்' என நம்பிக்கை

சென்னை, சன. 10—

இன்றுடன் நிறைவெய்திய இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு அயல் நாடுகளிலிருந்து பிரதிநிதிகளாகவும், பார்வையாளர்களாகவும் பங்கேற்றவர்களுக்குப் பொதுவாக இது அரிய அனுபவமாக இருந்தது; அவர்கள், 'உலகமென்பது பெரிய குடும்பம்' என்ற உணர்வுடன் தத்தமது தாயகங்களுக்குத் திரும்புகின்றனர்.

இது இரண்டாவது உலக மாநாடாயிருந்தபோதிலும்—முதல் மாநாடு 1966-ம் ஆண்டு மலேசியாவில் நடந்தது—உலகப் புகழ்பெற்ற விற்பன்னர்கள் இவ்வளவு பேரெண்ணிக்கையில்—அதிலும் தமிழ்ப் பேசும் மக்களின் தாயகத்தில் முதன் முதலாகக் கூடினர். தமிழின் தொன்மைமீதும், வளஞ்செறிந்த மரபின்மீதும் மேலும் இதர இனத்தவர் ஆழ்ந்த ஆர்வம் காட்டியதால் இம்மாநாடு பெரிதும் வெற்றியாக நிறைவெய்தியது.

சான்றாக, வேல்சிலுள்ள (பிரிட்டன்) காட்ரிப் பல்கலைக்கழகத்தின் வெல்ஷ் மொழி விரிவுரையாளரான செல்வி சீன்வென் எச். தாமஸ், இம்மாநாட்டில் பங்கெடுத்துக்கொண்டார். அவர் கூறியதாவது:—

"ஆங்கிலம் போன்ற உலகப் புகழ்பெற்ற மொழியின் நடுவே வேல்சின் மக்கள் தமது மொழியை மேம்படுத்தக் கொண்டுள்ள ஆர்வத்திற்கும்—இந்நாட்டில் பரந்த மாறுதல் உண்டாகிவருகிற போதிலும் தமது பண்பாட்டை வளப்படுத்தத் தமிழ் மக்கள் கொண்டுள்ள ஊக்கத்திற்குமிடையிலுள்ள ஒற்றுமை எனது உள்ளத்தைத் தொட்டுவிட்டது.

"நம்மிருவருக்கும் மாபெரும் எதிர்காலமிருக்கிறது என்ற நம்பிக்கையை மீண்டும் துளிர்க்கச் செய்துகொண்டு நான் திரும்புகிறேன்."

மாஸ்கோ பல்கலைக்கழகத்தின் பொருளியல்—புவியியல் பேராசிரியரான டாக்டர் பால் ஜார்க்கின் கூறியதாவது:—

"ஒரு மொழியை மேம்படுத்தப் பாமர மக்கள் இவ்வாறு கிளர்ந்தெழுந்ததை நான் கண்டதே இல்லை.

"இந்தியா இருபதாண்டுகளில் நீண்ட எட்டுக்களை வைத்திருக்கிறது; ஆனால் பண்பாட்டு மறுமலர்ச்சி இந்தியாவில் உண்டாகிறது என்பதை இது (பாமர மக்களின் எழுச்சி) காட்டுகிறது!

"மொழியைக் குறித்துப் பாமர மக்கள் இவ்வாறு பேரளவில் ஆர்வம் காட்டுவதை நான் ஐரோப்பாவில் வேறெங்கும் கண்டதில்லை!"

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியப் பல்கலைக்கழக மானிடவியல் இணைப் பேராசிரியரான டாக்டர் எம். எம். ஆமஸ் கூறியதாவது:—

"மக்களும் தமிழக அரசும் ஒரே மனத்தினராயிருக்கின்றனர்; இதுதான், தமிழ் மாநாட்டின்மீது இத்தனை அகத்தூண்டுதலை அளிக்கிறது!

"தமிழ்ப் பேசும் மக்களைப் பொறுத்தவரையில், மக்கள் அரசு — சனநாயகம் — நிச்சயமாக இருக்கும் என்று நம்புகிறேன்."

பின்லாந்தின் ஹெலிசிங்கி பல்கலைக்கழக மொழி ஒப்பியல் துறைப் பேராசிரியரான டாக்டர் பெண்டி ஆல்தோ கூறியதாவது:

"இங்கு நடப்பது என்னை வியப்பிலாழ்த்துகிறது. நான் எப்போதும் எனது கண்களையும், காதுகளையும் திறந்து வைத்திருக்க வேண்டியதாயிருந்தது.

"இங்கு உயிர்த் துடிப்பு நிரம்ப இருக்கிறன; தமிழகத்தில் நடந்துகோண்டிருப்பதில் ஒரு பகுதியாகவே (உலகத் தமிழ்) மாநாடு இருக்கிறது.

"பாமரனான குடியானவன் கூட இங்கு அரசியல் உணர்வு படைத்தவனாயிருக்கிறான்; அவனுக்குத் தனது எதிர்காலத்தைப் பற்றி நன்னம்பிக்கை இருக்கிறது; இது தான் தமிழ் மக்களிடத்தில் காணப்படும் தனிச் சிறப்பாயிருக்கிறது.

பாரிசிலுள்ள கீழை மொழிக் கூடத்தின் பேராசிரியரான பால் ஆல்பர்ட் கூறியதாவது:—

"நான் இத்தமிழாராய்ச்சி மாநாட்டில் இரண்டாவது முறை கலந்துகொண்டதிலிருந்து, 'நாமனைவரும் ஒரு பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்—நாம் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை கூடுவதற்கு ஒப்பியிருக்கிறோம்' என்பன எனக்கு உறுதியாயின.

"ஒருவரிடமிருந்து மற்றவர் பெரிதும் வேறுபட்டிருக்கக்கூடிய மக்கள் ஒருவரையொருவர் புரிந்துகொள்ளவும் நட்புப் பாராட்டவும் இதைத் தவிர வேறு வழி இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

"இம்மாநாடு தமிழ் மக்களின் தாயகமான தமிழகத்தின் தலைநகரான சென்னையில் நடப்பதால், மோழி ஆர்வலர்கள் புத்துயிர் பெற்றுள்ளனர்; பண்டைப் பண்பாட்டை ஆராய்வதன் வழியே உலக அமைதியைக் காண முடியும் என்ற ஒளி நிறைந்த நம்பிக்கையை இது உண்டாக்குகிறது."

மத்திய அமைச்சகங்களுக்கிடை விளையாட்டுப் போட்டி

முதலமைச்சர் அண்ணா பரிசுகள் வழங்குவார்

புதுடில்லி, சன. 11—

இம்மாதம் 18, 19-ம் நாட்களில், மத்திய அமைச்சகங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டி சென்னையில் நடைபெறவிருக்கிறது.

போட்டிகளில் வெற்றிபெறுபவர்களுக்கு 19-ந் தேதியன்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் பரிசுகளை வழங்குவார்.

மத்திய உள்துறை இலாகாவைச் சேர்ந்த விளையாட்டுகள் சம்பந்தமான போர்டு இந்த இரண்டு நாள் விளையாட்டுப் போட்டிக்கு ஏற்பாடு செய்திருக்கிறது.

25 பெண்கள் உள்பட 150-க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் இப்போட்டியில் கலந்துகொள்கிறார்கள்.

இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு:

‘பரந்து விரிந்த பிரதிநிதித்துவம் எங்களை மிகவும் கவர்ந்துவிட்டது’

‘தேசிய மரபையும் பண்பாட்டையும் போற்றும் தமிழ் மக்களின் மரபுக்குச் சான்று இது’

‘தமிழ் ஆராய்ச்சியில் புதிய சக்திகள் தோன்றிவிட்டன’— சோவியத் தூதுக் குழுத் தலைவர் பெருமிதம்

“நாங்கள் பற்பல சர்வதேச மாநாடுகளில் பங்கெடுத்துள்ளோம்; எனினும், இதுபோன்ற மாநாட்டை— பேரார்வத்துடன் பொதுமக்கள் பங்குகொள்ளும் நிகழ்ச்சியை - நாங்கள் கனவிலும் எதிர்பார்க்கவில்லை!

“மாநாட்டின் துவக்க விழாவன்று நடைபெற்ற ஊர்வலத்திலும்—அணிவகுப்பிலும் பல இலட்சம் மக்கள் பங்கு கொள்வரென்று நாங்கள் எள்ளளவும் எண்ணியதில்லை! தமிழ் மக்கள் தமது தேசிய மரபையும், பண்பாட்டையும் எவ்வளவு உயர்வாகப் போற்றுகிருர்கள் என்பதற்கு இது ஒரு சான்ருகும்!”

இவ்வாறு, இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் கலந்துகொண்ட ஐந்து பேர் கொண்ட சோவியத் தூதுக் குழுவினர், செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசுகையில் குழுத் தலைவரான பேராசிரியர் ஈ. பி. செலிஷேவ் குறிப்பிட்டுப் பெருமிதம் கொண்டார். அவர் மேலும் கூறியதாவது :—

“நாங்கள் முதன்முதலாகக் கலந்துகொள்ளும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இதுவே; இம்மாநாட்டின் பரந்து விரிந்த பிரதிநிதித்துவம் எங்களை மிகவும் கவர்ந்துவிட்டது; நாற்பதுக்கு மேற்பட்ட நாடுகளிலிருந்து அறிஞர்கள் வந்துள்ளனர்; காலை முதல் மாலை வரை புகழ்வாய்ந்த பன்னாட்டு அறிஞர்களை நாங்கள் சந்தித்துக்கொண்டிருக்கிறோம்; இத்தாலியிலிருந்தும், இதர நாடுகளிலிருந்தும் பல புதிய அறிஞர்களைச் சந்தித்தோம்; திராவிட இயல் குறித்து நாங்கள் மேன்மேலும் ஆராய இச்சந்திப்புகள் பெரிதும் பயன்படும்.

எங்களைக் கவர்ந்த மற்றொரு அம்சம், இவ்வாராய்ச்சி மாநாட்டில் திறமைமிக்க இளைஞர்கள் நிரம்பக் கலந்துகொண்டதாகும். மாநாட்டு ஆராய்ச்சிகளில் பழமையும், புதுமையும் கலந்துள்ளன; அதாவது, பழமையான கீழ்த்திசை ஆராய்ச்சியும், இன்றைய தமிழ் இலக்கியம், பண்பாடு பற்றிய ஆராய்ச்சியும் நன்முறையில் அமைந்துள்ளன.

சோவியத் யூனியனில் திராவிட மொழிகளைப் பற்றிய ஆராய்ச்சி 11 ஆண்டுகளுக்கு முன்புதான் துவக்கப்பட்டது; இதுவரை பற்பல இலக்கண நூல்களும் அகராதிகளும், ஆராய்ச்சி நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

மாஸ்கோ, லெனின் கிராடு, அயல்மொழிக் கல்லூரி ஆகிய 3 இடங்களில் தமிழ் கற்றுக் கொடுக்கப்படுகிறது; லெனின் கிராடு பல்கலைக் கழகத்தில் தெலுங்கு கற்றுக்கொடுக்கப்படுகிறது.”

சோவியத் தூதுக் குழுவின் மற்றோர் உறுப்பினரான திரு. ஆந்திரனேவ் பேசுகையில் கூறியதாவது :—

“தமிழ் ஆராய்ச்சியில் இப்போது பெருமளவு புதுச் சக்திகளைக் காண்கிறோம்; புதிய— நவீன அணுகல் முறையுள்ள இளம் அறிஞர்களைக் காண்கிறோம். 10 ஆண்டுகளுக்குமுன் பழந்தமிழ் ஆராய்ச்சி மட்டும் நடைபெற்றது; இப்பொழுது தற்கால வழக்குத் தமிழும் ஆராயப்படுகிறது.”

பேராசிரியர் செலிஷேவ் தமது முடிவுரையில் கூறியதாவது :—

“நாங்கள் அறிஞர்களுடன் மிகப் பரந்த தொடர்புகளை ஏற்படுத்தி உள்ளோம். பொதுவாகக் கூறுமிடத்து, இம்மாநாடு மிகப் பயனுள்ளது; இது மிக நன்ருக அமைக்கப்பட்டுள்ளது; சுவையான ஆய்வுரைகளை நாங்கள் கேட்டோம்; அவை சோவியத் யூனியனில் தமிழ் ஆராய்ச்சிக்குப் பெரிதும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்பது திண்ணம்.”

‘தலைவன்’

கோவையிலிருந்து புதிய பத்திரிகை

கோவையிலிருந்து ‘தலைவன்’ என்ற பெயரில் புதிய மாதமிருமுறைப் பத்திரிகை ஒன்று விரைவில் வரவிருக்கிறது.

இதன் வெளியிடுபவராகவும், ஆசிரியராகவும் சிங்காநல்லூர் நகர தி.மு.க. செயலாளர் கோவை க. இரத்தினம், அண்மையில் கோவை மாவட்ட அடிஷனல் இரண்டாவது வகுப்பு மாஜிஸ்திரேட்முன்பு தம்மைப் பதிவு செய்து கொண்டார்.

நிலத்திற்குக் கீழுள்ள நீர்

வெளியே கொண்டுவர நிபுணர்கள் திட்டம்

சென்னை, சன. 11—

நிலத்திற்குக்கீழ் உள்ள தண்ணீரை வெளியே கொண்டுவர ஐ. நா. உதவியுடன் ஆராய்ச்சி நடத்திவருகின்ற நிபுணர் குழு, காவிரி டெல்டா பகுதிகளிலும் அத்திட்டத்தின்கீழ் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் என்று தெரிகிறது.

இத்திட்டம், சென்னை நகரின் சில பகுதிகளிலும், நெய்வேலி நகர்ப் பகுதிகளிலும் செயல்பட்டு வருகிறது

டில்லியிலுள்ள ஐ நா. வளர்ச்சிக் குழுவின் பிரதிநிதி திரு. ஜான், இத்திட்டத்தின்கீழ் மேலும் சில பகுதிகளில் உள்ள நிலங்களுக்கு அடியில் உள்ள தண்ணீரையும், காவிரி டெல்டா பகுதிகளில் நிலத்திற்கடியில் உள்ள தண்ணீரையும் வெளியே கொண்டுவருவதற்கான ஆராய்ச்சியை விரிவுபடுத்த தமிழகத்திற்கு வந்திருக்கிருர்.

“வேளாண்மைக்குத் தேவையான தண்ணீரை வெளியில் கொண்டுவருவதற்காகவே காவிரி டெல்டாவில் இத்திட்டம் ஆராயப்படவிருக்கிறது” என்று அவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

காவிரி டெல்டாவில் ஆராய்ச்சி முடிக்கப்பட்டு திட்ட அறிக்கை ஐ. நா. அவைக்கு பிப்ரவரி இறுதிக்குள் அறிவிக்கப்படும் என்றும் இத்திட்டத்தை விரிவுபடுத்துகின்ற இறுதி முடிவை ஜூன் திங்களில் ஐ. நா. அவை எடுக்கும் என்றும் அவர் சொன்னர்.

இது தொடர்பாகத் தமிழக அரசு பிரதிநிதிகளையும் நிபுணர் குழு சந்தித்து விவாதிக்க இருக்கிறது.

‘தொட்டதனைத்து ஊறும் மணற்கேணி தமிழ்மொழி’

‘பண்பாடுமிக்க மக்களைத் தன்னகத்தே கொண்டது’

‘அண்ணுவின் நூல்களைப் பிலிப்பைன்ஸ் நாட்டுத் தேசிய மொழியில் மொழிபெயர்ப்போம்’

பேராசிரியர் ஜே. ஆர். பிரான்சிஸ்கோ கருத்துரை

“தொட்டதனைத்து ஊறும் மணற்கேணி போன்றது தமிழ் மொழி! அதனை ஆராய மகிழ்ச்சியும் இன்பமும் அதிகரிக்கிறது!

“தமிழ் மொழி பழமையான மொழி மட்டுமல்ல—பண்பாடுமிக்க மக்களைத் தன்னகத்தே கொண்டதாகும்!

“தமிழில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய தி. மு. கழகத் தலைவரும், தமிழக முதல்வருமான திரு. அண்ணுதுரை எழுதிய நூல்களை நான் படிக்க விரும்புகிறேன்; முடிந்தால் அவற்றை, பிலிப்பைன்ஸ் நாட்டுத் தேசிய மொழியில் மொழிபெயர்க்கவும் விரும்புகிறேன்”

என்று பிலிப்பைன்ஸ் நாட்டுப் பல்கலைக் கழகங்களின் பேராசிரியர் ஜே. ஆர். பிரான்சிஸ்கோ, செய்தியாளரிடம் சொன்னர்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு கருத்தரங்கில் கலந்து கொண்ட அவர் மேலும் கூறியதாவது :—

“திருக்குறளை பிலிப்பைன்ஸ் நாட்டுத் தேசிய மொழியான ‘டாக்லாங்’ என்ற மொழியில் மொழிபெயர்க்கத் திட்டமிட்டிருக்கிறேன். இன்னும் பலவிதமான தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்க முயற்சிக்கிறேன்.

“மாதர்தம் பெருமை சொல்லும் மணிமேகலை, நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் போன்ற சிறந்த தமிழ் இலக்கியங்களை மொழிபெயர்க்கவும் திட்டமிட்டுள்ளேன்.

‘கடாரம் கொண்டான் தமிழன்’ என்ற வரலாற்றுக்கேற்ப, மலேசிய நாட்டிலிருந்து இந்தோனேசியா வழியாகப் பண்டைத் தமிழ் இலக்கியம் எங்கள் நாட்டுக்கு வந்துள்ளது.

“முதலாவது உலகத் தமிழ் மாநாடு கோலாலம்பூரில் கோலாகலமாக நடைபெற்றது; அந்த மாநாட்டிலும் நான் கலந்துகொண்டேன். அங்கு, குறிப்பிட்ட தமிழ் அறிஞர்கள் மட்டுமே கலந்துகொண்டனர்; தமிழ் அறிஞர்கள் அனைவரையும் சென்னையில் நடக்கும் இந்த உலகத் தமிழ் மாநாட்டில் ஒருசேரப் பார்க்கும்போது பெருமிதம் அடைகிறேன்; தமிழ் மொழியின் வரலாறு என்னை மிகவும் கவர்ந்துள்ளது.”

*

இலக்கிய மகுடத்தில் நாங்கள் பதிக்கின்ற புதிய வைடூரியம்!

திருவிளக்கு

ஆசிரியர் :

க. இராசாராம். பி.ஏ., எம்.பி

பொங்கல் மலர்

விலை 1 ரூபாய்.

தனி இதழுக்கு, 1·25. M.O அனுப்பவும்

விற்பனையாளர்கள் முன்கூட்டி பதிவு செய்து கொள்ளுங்கள்!

JAYA

திருவிளக்கு * சென்னை.6

‘தொண்டர்கள் தியாகம் வீண் போகவில்லை’

‘தமிழுக்கு மறுமலர்ச்சி ஏற்பட்டு விட்டது’

‘ஏற்பட்ட மாற்றம் சாமானியமானதல்ல’— அமைச்சர் கே. ஏ. மதியழகன் விளக்கம்

பூம்புகார், சன. 9—

“தமிழர்கள் ஒரு காலத்தில் கோட்டைகளை இழந்தார்கள்; கொத்தளங்களை இழந்தார்கள்; சொத்துக்களை இழந்தார்கள்; ஆனல், தமிழை மட்டும் அவர்கள் இழக்கவில்லை!

“அத்தகைய தமிழ், ஊனோடு உயிரோடு—உணர்வோடு கலந்து தித்திக்கும் நமது தமிழ் அரியாசனத்தில் ஏற, அருணுதயமாக அறிஞர் அண்ணு அவர்கள் வந்தார்கள்!

“இந்த மாற்றம் சாமானியமாக ஏற்பட்டு வந்ததல்ல! ஆயிரமாயிரம் தொண்டர்களின் தியாகத்தால் ஏற்பட்ட மாற்றம்! அதன் நினைவாகத்தான் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது!”

இவ்வாறு அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள், பூம்புகாரில் ஆரும் நாளன்று நடைபெற்ற பட்டிமன்ற சொற்போர் நிகழ்ச்சிக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது :–

“பத்து நாட்களாக சென்னைத் திருநகர் திருவிழாக் கோலம் பூண்டிருக்கிறது. இத்தகைய கூட்டத்தை நான் என் வாழ்நாளிலேயே கண்டதில்லை.

“ஒரு காலத்தில், தமிழ் வாழுமா என்று ஐயப்பட்டார்கள்! ‘வளருமா’ என்று சிலர் கேள்விக் கணைகள் தொடுத்தார்கள்! அப்பொழுதெல்லாம் தமிழன்னை, இருள் சூழ்ந்த அந்தகாரத்திலே சிக்கி அவதிப்பட்டுக் கொண்டிருந்தாள்!

“அந்தகாரத்திலிருந்து தமிழுக்கு இன்று மறுமலர்ச்சி ஏற்பட்டிருக்கிறது!”

வரிகள் மூலம் கிடைக்கும் வருமானம் ஆண்டுக்கு ஆண்டு கூடிவருகிறது!

ஏழு மாதங்களில் டெல்லிக்குக் கிடைத்தது ரூ. 1,177 கோடி!

புதுடில்லி, சன. 11—

நடப்பு நிதியாண்டின் (1967—68) முதல் ஏழு மாதங்களில் அதாவது 1967 ஏப்ரல் முதல் அக்டோபர் வரை மத்திய அரசுக்கு வரிகள் மூலம் ரூ. 1,177.32 கோடி வருமானமாகக் கிடைத்திருக்கிறது.

சென்ற நிதி ஆண்டில் (1966—67) இதே காலத்தில் ரூ. 1,129.15 கோடி வருமானமாகக் கிடைத்தது.

சென்ற ஆண்டு (1967) அக்டோபர் மாதத்தில் ரூ. 178.30 கோடி வருமானமாகக் கிடைத்திருக்கிறது.

1966 அக்டோபரில் கிடைத்த வருமானம் ரூ. 159.84 கோடியாகும்.

தமிழர்கள் ஆர்த்தெழுந்தால்...?

தடுத்து நிறுத்த இத்தரணியில் எந்தச் சக்தியும் இல்லை!

சென்னை, சன. 10—

"தமிழ் மக்களின் உள்ளங்களில் ஒருவித அச்சம் நிலவுகிறது; தங்களது தொன்மையும் வளமையுமிக்க மொழிக்கு, 'வளமை சிறிதுமில்லாத—உலக மொழிகளின் வரிசையில் இன்னமும் இடம்பெருத ஒரு மொழியினுல் ஆபத்து ஏற்படுகிறதே' என்பதுதான் அந்த அச்சமாகும்.

"பல இலட்சக்கணக்கான தமிழர்கள் தங்களது மொழியிடம் பற்றுக்கொண்டிருக்கின்றனர்; அதே நேரத்தில் 'இந்நாட்டிலுள்ள மற்ருெரு மொழியினுல் அபாயம் ஏற்படும்' என்ற அச்சமும் அவர்களது உள்ளத்தில் நிலவுகிறது!

"அரசியலைப் புகுத்த இந்த அரங்கைப் பயன்படுத்த முயலுவதாகப் பிரதிநிதிகள் அஞ்சத் தேவையில்லை; அரசியலை நான் புகுத்தவில்லை—அதற்கு வேறு அரங்குகள் இருக்கின்றன. இலட்சோபலட்சம் தமிழர்கள் தங்களது தொன்மையான – வளமைமிக்க மொழிக்கு ஏற்படும் அபாயத்தைக் களைய விரும்புகின்றனர் என்பதை எடுத்துக்காட்டவே விரும்புகிறேன்.

"தமிழை அச்சுறுத்தி அழித்திட முனைந்த மொழிகள் இதற்குமுன் தோற்றன! அவற்ருல் தமிழுக்குப் பழுது ஏற்படுத்த முடியவில்லை! தமிழ் பழுதுருது தன்மணம் வீசி நிற்கிறது!

"தங்கள் மொழிக்கும் – தங்கள் வாழ்க்கை முறைக்கும் ஆபத்து ஏற்படாதவாறு தமிழர்கள் முன்னெச்சரிக்கையாக உள்ளனர்!

"தங்கள் மொழியை வேற்று மொழி ஒன்று உண்மையாகவே அச்சுறுத்துகிறது என்பதை உணர்ந்துவிட்டால்—தங்கள் வாழ்க்கை முறைக்கே அபாயம் ஏற்படும் கட்டம் நெருங்குகிறது என்பதைத் தெரிந்துகொண்டுவிட்டால் – நிச்சயம் தமிழர்கள் ஆர்த்தெழுவர்! தமிழ்ச் சமுதாயத்தின் அந்தச் சீற்றத்தின் முன்பு தரணியின் எந்தச் சக்தியும் நிற்க இயலாது—அவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது!"

—அறிஞர் அண்ணு
(உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில்)

சிறைக் கைதிகட்குப் புதிய வசதி!

கோவை, சன. 10—

சிறைச்சாலைகளில் உள்ள கைதிகள் தங்களுக்குத் தேவையான சாமான்களை வாங்கிக்கொள்ள வழிசெய்கின்ற வகையில், தமிழகச் சிறைச்சாலைகளில் கூட்டுறவுக் கடைகள் அமைக்கப் படவிருக்கிறது.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி, தமிழகம் முழுவதிலும் 2,500 கைதிகள் விடுதலை செய்யப்பட்டிருக்கின்றனர்.

இத்தகவலை தமிழ்நாடு சிறைச்சாலைத்துறை தலைமை அதிகாரி வெளியிட்டார்.

தாய்மொழி--:

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லும் தமது இன்னுயிரைத் தந்தேனும் தமிழைக் காப்போம்" என்று அந்த வெளிநாட்டு வித்தகர்கள் தமது நாடுகளான இரஷ்யாவலும், அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும், இலங்கையிலும், மலேசியாவிலும், இந்தோனேஷியாவிலும், மோரீஸ் தீவிலும், பிஜித் தீவிலும் பேச இருக்கிருர்கள்! பேச வாய்ப்பும் உரிமையும் உள்ள இடத்திலெல்லாம் பேச இருக்கிருர்கள்!"

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

12--1--68

ஐவநல்லூர்

தி.மு.க., உழவர் முன்னேற்ற மன்றம் ஆகியவற்றின் சார்பில் ஊராட்சித் தலைவர் எம். கோபால்சாமிக்குப் பாராட்டு; மாலை 6 மணிக்கு பெரியார் திடலில்; தலைவர்: எம். இராமையா; பேசுவோர்: ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., எஸ். தியாகராசன் பி.ஏ., பி.எல்., பொ. கணபதி, கல்யாணசுந்தரம், இலட்சுமணன், எத்திராசு, எஸ். பக்கிரிசாமி, ஆறுமுகம், வெ. பாண்டியன்.

(முருகுபாண்டியனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

62-வது பார்க்பேர் பொருட்காட்சி

எஸ். ஐ. ஏ. ஏ. மைதானம் --- சென்னை-3

12--1--68 வெள்ளிக்கிழமை
(துவாதசியன்று)

தி.மு.க.-வின் 18 ஆண்டுச் சாதனைகளைக் காணத்தவருதீர்

மாலை 4 மணிக்கு ரேக்ளா பந்தயம் நடைபெறும்

மாலை 6-30 மணிக்கு:

கே. எஸ். பி. ரிக்ரியேஷன்ஸ் அளிக்கும்
'புதுமணம்' (நகைச்சுவை நாடகம்)

கட்டணம்: ரூ. 2, 1. காசு 50

15—1—68 திங்கள் மாலை 6-30 மணிக்கு—நாட்டியப் பேரொளி பத்மினியின் 'தசாவதாரம்' நாட்டிய நாடகம் நடைபெறும்.

நிறைவான நினைவோடு நாடு திரும்புங்கள்!

"பன்னுட்டறிஞர்களே—தமிழ்நாட்டிற்கு அடிக்கடி வாருங்கள்! வரவேற்று விருந்தோம்புவது தமிழர் மரபு!

"தமிழ் மொழியினிடத்து இங்குள்ள மக்கள் கொண்டுள்ள உயரிய மதிப்புக் குறித்து நிறைவான நினைவுகளோடு நாடு திரும்புங்கள்;

"'எங்கள் மொழியைப் படியுங்கள்' என்ருே, 'எங்களைப் பின்பற்றுங்கள்' என்ருே, எவரையும் தமிழர்கள் வற்புறுத்தியதில்லை!

"தமிழர்கள் தங்கள் மொழியைக் குறித்துப் பெருமைப்படுகிருர்கள்; அந்தப் பெருமை மற்ற மொழிகளுக்குப் பாதகமானதல்ல; பெருமைக்குரியதும் செறிவுடையதுமான இம்மொழிக்கு உலகில் உரிய இடம் அளிக்கப்பட வேண்டுமென்றுதான் கேட்கிருேம்!

"இந்த எங்களது வேண்டுகோளை அறிஞர்கள் தங்களது நாடுகளுக்கு எடுத்துச்சென்று தங்களது மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும்.

"உயர்வான இலக்கியத்தையும் செறிவுடைய மொழியையும் உடையவர்கள் தமிழர்கள்! 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அவர்களது தமிழ் மொழியில் கூறப்பட்டுள்ளதென்பதை எடுத்துக் கூறுங்கள்!

"அன்பான–சாதுவான–பழகுவதற்கு இனிய அந்தத் தமிழ் மக்கள், பிறருக்காகத் தங்களிடமுள்ள உயர்ந்ததையும் வழங்கிடத் தயங்க மாட்டார்கள் என்பதையெல்லாம் உங்கள் மக்கள் புரிந்துகொள்ளும்படிச் செய்யுங்கள்!

"அதே சமயத்தில், தமிழ் மக்கள் தங்களது மொழியும் வாழ்க்கை முறையும் பிறரால் களங்கப்படுத்தப்படுவதைத் தடுத்திட விழிப்போடிருக்கிருர்கள் என்பதையும் எடுத்துச் சொல்லுங்கள்!"

—அறிஞர் அண்ணு
(உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கருத்தரங்கில்)

பூவாளூர் பொன்னம்பலனுர் மறைவு

சென்னை, சன. 11—

பழம்பெரும் இயக்கத் தோழர் பூவாளூர் அ. பொன்னம்பலனுர் அவர்கள் இன்று விடியற்காலை, சென்னை மருத்துவமனையில் இயற்கையெய்தினுர் என்ற துணுக்குறும் செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிருேம்.

திரு, பொன்னம்பலனுர் அவர்கள், உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ளுவதற்காக சென்னை வந்திருந்தார்; மாநாட்டிலும் கலந்துகொண்டு முழு நலத்துடனேயே இருந்தார்; திடீரென நேற்று நெஞ்சு வலி ஏற்பட்டு நள்ளிரவு 2-30 மணியளவில் தலைமை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்; அங்கு சிகிச்சைக்கும் பிறகும் விடியற்காலை 3-30 மணிக்கு உயிர் பிரிந்தது.

செய்தியறிந்ததும் கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி., பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., சா. கஜேந்திரன் ஆகியோர் மருத்துவமனைக்குச் சென்று, தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

உடன், உடல் கோடம்பாக்கம் அண்ணு நகரில் உள்ள சின்னையா காலனிக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கிருந்து காலை 11-மணியளவில் பூவாளூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது. அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், திருச்சி மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் அவர்களும் உடன் செல்கிருர்கள்.

இன்று மாலை பூவாளூரில் உடல் அடக்கம் செய்யப்படும்.

செய்தியறிந்ததும் முதலமைச்சர் அறிஞர் அண்ணு, மற்றும் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணுநிதி, செ. மாதவன், சாதிக் பாட்சா, சத்தியவாணிமுத்து, கே. ஏ. மதியழகம், எம். முத்துசாமி, தோழர்கள் இரா. செழியன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, அன்பில் தர்மலிங்கம், ஜி. பி. சோமசுந்தரம், மா. கி. தசரதன், கி. ஆ. பெ. விசுவநாதம், காஞ்சி மணிமொழியார், வி. முனுசாமி, நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், திருமதி அலமேலு அப்பாதுரை மற்றும் பல்வேறு துறைகளைச் சேர்ந்தவர்களும் சென்று தங்கள் இறுதி மரியாதையைத் தெரிவித்துக் கொண்டனர்.

பூவாளூர் பொன்னம்பலனுர் அவர்கள், சுயமரியாதை இயக்கம் துவக்கப்பட்ட காலமுதல், பெரியார் ஈ. வெ. ரா., அறிஞர் அண்ணு ஆகியோருடன் இருந்து பட்டிதொட்டியெங்கும் பிரசாரம் செய்து வந்தவர் ஆவார்.

'விடுதலை' இதழின் ஆசிரியராக இருந்ததுடன், 'குடியரசு' இதழிலும், மற்றும் பல ஏடுகளிலும் சீர்திருத்தக் கருத்துக்களை எழுதி வந்தவராவார்.

திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றிய காலந்தொட்டு, நமது கழகத்தின் பொதுக்குழு உறுப்பினராக இருந்து வந்ததுடன், 'நம் நாடு' இதழின் பொறுப்பாளராகவும், சில ஆண்டுகள் இருந்திருக்கிருர்.

அறிஞர் அண்ணு அவர்களுடன் பல ஆண்டுக் காலம் கூடவே இருந்து உறுதுணை புரிந்திருக்கிருர்.

அறுபத்திரண்டு வயதுடைய திரு. பொன்னம்பலனுர் அவர்கள், விதவை மணம், பெண்களுக்குச் சமவுரிமை ஆகியவற்றைத் தீவிர எதிர்ப்புக்களுக்கிடையே பிரசாரம் செய்து, பகுத்தறிவு இயக்கம் பரவ ஆணிவேராக இருந்தவர்களுள் ஒருவராவார்.

அவர் மறைவு, தமிழகத்துக்கும், பகுத்தறிவு இயக்கத்துக்கும் பேரிழப்பாகும்.

பொன்னம்பலனுர் அவர்களைப் பிரிந்து துயருறும் அவரது குடும்பத்தாருக்கும், இயக்கத் தோழர்கட்கும் நமது ஆழ்ந்த அனுதாபமும் ஆறுதலும் உரித்தாகுக.

(ஆ–ர்).

தேவநேயப்பாவாணருக்குப் பொன்னுடை

அமைச்சர் கருணுநிதி போர்த்தினுர்

சென்னை, சன. 11—

திராவிட மொழி நூலறிஞர் திரு. ஞா தேவநேயப்பாவாணர் அவர்களுக்கு அமைச்சர் திரு. கருணுநிதி அவர்கள் பொன்னுடை போர்த்திச் சிறப்பித்தார்.

உலகத் தமிழ் மாநாட்டின் இறுதி நாளான நேற்று, பூம்புகார் அரங்கில் இந்தப் பொன்னுடை போர்த்து விழா நடைபெற்றது.

அமைச்சர் கருணுநிதி அவர்கள் பாவாணரின் அருந் தமிழ் பணிகள் குறித்தும், தமிழுக்கு அவர் ஆற்றிவருகின்ற அரிய தொண்டு குறித்தும் பாராட்டிப் பேசினுர்.

சிறைக் கவிஞர்களுக்கு மற்ருெரு சலுகை

பொங்கல் திருநாளைத் தங்கள் வீட்டில் கொண்டாடலாம்

சென்னை, சன. 10—

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டிக் கவிதைகள் புனைந்ததற்காகப் பரோலில் விடுதலை செய்யப்பட்ட 21 கைதிகளும், மாநாடு முடிந்து தத்தமது சொந்த ஊர்களுக்குச் செல்லத் தமிழக அரசு அனுமதித்துள்ளதாகத் தெரிகிறது.

சொந்த ஊர்களுக்குச் செல்லும் இக்கைதிகள், தாங்கள் எந்தெந்தச் சிறைச்சாலைகளில் இருந்து பரோலில் விடுவிக்கப்பட்டனரோ அந்தச் சிறைச்சாலைகளுக்கு சனவரி 18-ம் நாளுக்குள் திரும்பிவிட வேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பித்திருப்பதாகத் தெரிகிறது.

ஒப்புதல் கிடைத்துவிட்டதாம்!

1967-ம் ஆண்டு மக்களவையில் நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்திருக்கிருர்.

இப்போது அந்த மசோதா சட்டமாக அமுலுக்கு வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை—1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.